**செய்தி வெளியீடு எண்: 805** **நாள்: 30.12.2011**

**இயற்கையுடன் இணைந்து வாழ்வோம் – மகளிர் மேளா 2012**
**மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்**
**புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சி**

மாநில அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. 2012ஆம் ஆண்டு புத்தாண்டு மற்றும் பொங்கல் திருவிழாவினை முன்னிட்டு, இயற்கையுடன் இணைந்து வாழ்வோம் என்பதை நோக்கமாகக் கொண்டு, மாநிலம் முழுவதும் உள்ள சுய உதவிக் குழுக்களால், இயற்கை மூலங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்துடன் **மகளிர் மேளா 2012** என்ற பெயரில் விற்பனைக் கண்காட்சி, 30.12.2011 முதல் 28.01.2012 வரை, அன்னை தெரசா மகளிர் வளாகம் (வள்ளுவர் கோட்டம் அருகில்) நுங்கம்பாக்கம், சென்னையில் நடைபெற உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொழில் திறன், உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்கள் தம் ஆற்றலை வெளியுலகுக்கு உணர்த்திடவும், சுய உதவிக் குழுக்களின் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும் இந்த விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது. அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறும் கண்காட்சியில் 40 விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் பல்வேறு வகையான கடல் சார்ந்த பொருட்கள், கைவினைப் பொருட்கள், கலைப் பொருட்கள், சணல் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், பாக்கு மட்டையிலான பொருட்கள், காகிதப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், தேன், மலைவாழ் மகளிர் தயாரித்த கம்பளி ஆடைகள், கைத்தறி மற்றும் பட்டுப் புடவைகள், கைவேலைபாடுகள் நிறைந்த மண் பொம்மைகள், உலோகம், மரம், மண் மற்றும் மரக்கூழ் சிற்பங்கள், வீட்டில் அன்றாடம் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கண்காட்சியில் குழந்தைகளை மகிழ்விக்கும் வண்ணம் பல்வேறு விளையாட்டுகளைக் கொண்ட அரங்கம், பாரம்பரியமும் இயற்கையும் இணைந்த சுவை மிகுந்த உணவு வகைகளைக் கொண்ட உணவகங்கள், கண்காட்சிக்கு வருகை தருபவர்களின் மனம் கவரும் வகையில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள், பொருட்களை வாங்குபவர்களுக்கு பரிசுக் கூப்பன்கள் மற்றும் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கான இடவசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக் கைவினைஞர்களையும், சுய உதவிக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களின் தயாரிப்புகளை வாங்கி, இந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவினை இவர்களுடன் இணைந்து கொண்டாடுங்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**